/பதிவுத்துறை/

அனுப்புநர்

பதிவுத்துறைத்தலைவர்,
(முழு கூடுதல் பொறுப்பு)
பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்,
சென்னை-28.

பெறுநர்

1.அனைத்து துணைப்பதிவுத்துறைத்தலைவர்கள்,
2.அனைத்து மாவட்டப்பதிவாளர்கள்,
3.அனைத்து சார்பதிவாளர்கள்,

கடித.எண்.11001/சி1/2019, நாள் 14.03.2019

ஐயா/அம்மையீர்,

பொருள்: பதிவுத்துறை – 2018-2019 நிதியாண்டு நிறைவு பெறுதல் - 2019 மார்ச் மாதம் - 23/03/2019 மற்றும் 30/03/2019 ஆகிய இரு சனிக்கிழமை விடுமுறை நாள்களில் ஆவணப் பதிவு செய்திட ஏதுவாக பதிவு அலுவலகங்களை செயல்பாட்டில் வைத்திட பொதுமக்கள் கோரிக்கை – தொடர்பாக.

*******

பொருள் தொடர்பாகப் பெறப்பட்ட கோரிக்கைகளில், ஆவணப்பதிவுகள் மேற்கொள்வதற்கு மார்ச் 2019 மாதத்தில் முன் பதிவு செய்யப்பெற்றுள்ளதாகவும் இதர நிதி நிறுவனங்களாலும் மார்ச் 2019 மாதத்தில் முக்கியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதையும் முன்னிட்டு, நடப்பு 2019 மார்ச் மாதத்தில் 23/03/2019 மற்றும் 30.03.2019 ஆகிய இரு சனிக்கிழமை விடுமுறை நாள்களில் மட்டும் தமிழ்நாட்டில் அமைந்துள்ள அனைத்து பதிவு அலுவலகங்களில் ஆவணப் பதிவுகள் மேற்கொள்வதற்கு அலுவலகங்களை அன்றைய தினத்தில் செயல்பாட்டில் வைத்திடுமாறும் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

2. கோரிக்கை; ஆய்வு செய்யப்பட்டதன் அடிப்படையில், மேற்குறிப்பிட்ட 23/03/2019 மற்றும் 30.03.2019 ஆகிய இரு சனிக்கிழமை விடுமுறை நாள்களில் மட்டும் ஆவணப்பதிவினை ஏற்பதற்கு ஏதுவாக தமிழ்நாட்டில் அமைந்துள்ள அனைத்து பதிவு அலுவலகங்களும் அன்றைய தினத்தில் வழக்கம்போல் காலை 10.00 மணி முதல் ஆவணப்பதிவு முடியும் வரை செயல்பாட்டில் வைத்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

3. மேற்குறிப்பிடும் விடுமுறை நாளில் மேற்கொள்ளப்படும் ஆவணப் பதிவுகளுக்கு பதிவுச் சட்டம் கீழுள்ள Table of fees இனம் 17(3)-ன் a,b,c-ல் கூறப்பட்டவாறு கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படவேண்டும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. 23/03/2019 மற்றும் 30/03/2019 அன்று அனைத்து சார்பதிவகங்கள் செயல்பாட்டில் உள்ளது குறித்தும் ஆவணங்கள் அன்றைய தினம் பதிவுக்கு ஏற்கப்படும் என்பது குறித்தும் அனைத்து சார்பதிவகங்களிலும் அலுவலக அறிவிப்பு பலகையில் பொதுமக்கள் அறியும் வண்ணம் விளம்பரபடுத்திடவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

5.மேலும் அன்றைய தினங்களில் ஸ்டார் 2.0 திட்டப்படி அனைத்து அலுவலகங்களிலும் பதிவு பணி இணையவழி தடையின்றி நடைபெற ஏதுவாக பொதுமக்களுக்கு முன் பதிவு (Token) செய்திடும் வசதி மற்றும் அலுவலக பணியாளர்கள் பொதுமக்களுக்கான “Help Tesk” மற்றும் “Help Line” வசதி ஆகியவற்றினை எவ்வித குறைபாட்டுக்கும் இடமின்றி உடன் ஏற்படுத்திட “TCS” மென்பொறியாளர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

6. மேலும் அன்றைய தினத்தில் இணையவழி பணம் செலுத்துதல் மற்றும் “POS” முறையில் பணம் செலுத்துதல் போன்ற பணிகளிலும் எவ்வித குறைபாடுகிடமின்றி பணியாற்றிட அனைத்து அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

7. அனைத்து மாவட்டப்பதிவாளர்கள் தங்கள் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் சார்பதிவகங்களுக்கு இக்கடித அடிப்படையில் உரிய விபரம் தெரிவிக்குமாறும் பொதுமக்களுக்கு உரிய அறிவிப்பு செய்திடுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/..14.03.2019
பதிவுத்துறைத்தலைவர் (மு.கூ.பொ)

/ஆணைப்படி/

கூடுதல் பதிவுத்துறைத்தலைவர்
(முத்திரை மற்றும் பதிவு)
14/3/19

நகல்:

1.முதுநிலை நேர்முக உதவியாளர்,
மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்கள்,
தலைமைச் செயலகம், சென்னை-9.
2.தலைமைச் செயலாளர்,
தமிழ்நாடு அரசு, தலைமைச் செயலகம்,
சென்னை-9.
3.கூடுதல் தலைமைச் செயலாளர்,
நிதித்துறை, தலைமைச் செயலகம்,
சென்னை-9
4.கூடுதல் தலைமைச் செயலாளர்,
உள்துறை, தலைமைச் செயலகம்,
சென்னை-9.
5.முதன்மைச் செயலாளர்,
வணிகவரி மற்றும் பதிவுத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.
6.இயக்குநர்,
பதிவுத்துறை பயிற்சி நிலையம்,
சென்னை-14.
7.அனைத்து உயர் அலுவலர்கள்
பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்.
8..இயக்குநர் பதிவுத்துறை பயிற்சி நிலையம்,
9.அனைத்துப் பிரிவு கண்காணிப்பாளர்,
பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்.
10.பதிவுத்துறைத்தலைவரின் நேர்முக எழுத்தர்.
11.TCS

Verified @ RealEstate ™